# ஏப்ரல் - 27- வியாழன்

## எகிப்து தேச புனித மரியாள்

**மேலிருந்து வருபவர், அனைவரையும்விட மேலானவர். மண்ணுலகிலிருந்து உண்டானவர் மண்ணுலகைச் சேர்ந்தவர். மண்ணுலகு சார்ந்தவை பற்றியே அவர் பேசுகிறார். விண்ணுலகிலிருந்து வருபவர், அனைவருக்கும் மேலானவர். யோவா. 3:31**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி5 : 27 – 33

அந்நாட்களில் காவலர்கள் திருத்தூதர்களை அழைத்துக்கொண்டு வந்து யூதத் தலைமைச் சங்கத்தின்முன் நிறுத்தினார்கள். தலைமைக் குரு அவர்களை நோக்கி, ”நீங்கள் இந்த இயேசு பற்றிக் கற்பிக்கக்கூடாது என்று நாங்கள் கண்டிப்பாய்க் கட்டளையிடவில்லையா? என்றாலும் எருசலேம் முழுவதும் நீங்கள் கற்பித்து வருகிறீர்கள். மேலும் இந்த மனிதருடைய இரத்தப் பழியையும் எங்கள்மீது சுமத்தப் பார்க்கிறீர்களே!” என்றார். அதற்குப் பேதுருவும் திருத்தூதரும் மறுமொழியாக, ”மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும்? நீங்கள் சிலுவையில் தொங்கவைத்துக் கொன்ற இயேசுவை நம் மூதாதையரின் கடவுள் உயிர்த்தெழச் செய்தார். இஸ்ரயேல் மக்களுக்கு மனம் மாற்றத்தையும் பாவமன்னிப்பையும் அளிப்பதற்காகக் கடவுள் அவரைத் தலைவராகவும் மீட்பராகவும் தமது வலப்பக்கத்துக்கு உயர்த்தினார். இவற்றுக்கு நாங்களும் கடவுள் தமக்குக் கீழ்ப்படிவோருக்கு அருளும் தூய ஆவியும் சாட்சிகள்” என்றனர். இவற்றைக் கேட்ட தலைமைச் சங்கத்தார் கொதித்தெழுந்து, திருத்தூதர்களைக் கொல்லத் திட்டமிட்டனர்.

**பதில்பாடல்:** ஏழை கூவியழைத்தான்.ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார

## நற்செய்தி: யோவான் 3: 31 – 36

அக்காலத்தில் இயேசு நிக்கோதேமிடம் கூறியது: மேலிருந்து வருபவர், அனைவரையும்விட மேலானவர். மண்ணுலகிலிருந்து உண்டானவர் மண்ணுலகைச் சேர்ந்தவர். மண்ணுலகு சார்ந்தவை பற்றியே அவர் பேசுகிறார். விண்ணுலகிலிருந்து வருபவர், அனைவருக்கும் மேலானவர். தாம் கண்டதையும் கேட்டதையும்பற்றியே அவர் சான்று பகர்கிறார். எனினும் அவர் தரும் சான்றை எவரும் ஏற்றுக்கொள்வதில்லை. அவர் தரும் சான்றை ஏற்றுக் கொள்பவர் கடவுள் உண்மையானவர் என்பதை உறுதிப்படுத்துகிறார். கடவுளால் அனுப்பப் பெற்றவர் கடவுளின் வார்த்தைகளைப் பேசுகிறார். கடவுள் அவருக்குத் தம் ஆவிக்குரிய கொடைகளை அளவின்றிக் கொடுக்கிறார். தந்தை மகன் மேல் அன்பு கூர்ந்து அனைத்தையும் அவர் கையில் ஒப்படைத்துள்ளார். மகனிடம் நம்பிக்கை கொள்வோர் நிலைவாழ்வைப் பெறுவர். நம்பிக்கை கொள்ளாதோர் வாழ்வைக் காணமாட்டார். மாறாகக் கடவுளின் சினம் அவர்கள்மேல் வந்து சேரும்“ என்றார்.

**தியானம் :** கடவுள் தம் வார்த்தையை தமது மக்களுக்கு அறிவிக்க, அவர்களை வழிநடாத்தவென பலரைத் தெரிந்தெடுத்தார். அவர்கள் அனைவரையும் விட தனது வருகையும், தான் கொண்டுவந்த நற்செய்தியும் முதன்மையானதும், முழுமையானதும் என்பதை இயேசு இன்று வலியுறுத்திக் கூறுகின்றார். தாம் தந்தையிடமிருந்து வந்தவர் என்பதையும், தந்தையாம் கடவுளே நம்மை அனுப்பினார் என்பதையும், தந்தையின் அன்பின் முழுவடிவம் தாமே என்பதையும், தந்தை தமது மக்களுக்குச் சொல்லவும், செய்யவும் சித்தம் கொண்ட அனைத்தும் தம் வழியாக நிறைவேறியிருக்கின்றன என்பதையும், தன் தந்தையின் மீட்புத் திட்டம் தன்னிலே நிறைவுபெறுகின்றன என்பதையும், வேறொரு மெசியாவை நாம் எதிர்பார்த்திருக்கத் தேவையில்லை என்றும் இறைமகன் இயேசு இன்று நமக்குக் கற்றுத் தருகின்றார். எனவே, நாம் மீட்படைய வேண்டுமெனில் அவரை விசுவசித்து அவர் வழிசெல்வதே ஒரேவழி. தமது வழிகளிலே கடவுள் செய்றபட வேண்டுமென்றும், தாம் தீட்டிய திட்டத்திற்கு கடவுள் ஒத்துவர வேண்டும் என்றும் காத்திருந்த தலைமைச் சங்கத்தினர் இயேசுவைக் கொலை செய்ததுமன்றி, அவரது உயிர்ப்பையும் மறைத்துவிட எண்ணி திருத்தூதர்களை மிரட்டுகின்றனர். கடவுள் தமக்குக் கீழ்ப்படிவோருக்கு அருளும் தூயஆவியின் முன்னிலையில் எந்த அதிகாரமும் நிலைநிற்க முடியாதென்பதை திருத்தூதர்கள் நிரூபித்துக் காட்டியதுபோல நாமும் உறுதியுடன் வாழ்ந்து ‘இயேசுவே இறைமகன்’ எனச் சாட்சியம் பகர்வோமாக.